JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.105/2021 Date:13.08.2025 P.W. 4 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. பசுபதி |
| தந்தை பெயர், க/பெ | திரு. நாராயணசுவாமி |
| முகவரி | நெ. 38/82 அசோக் நகர் 4 வது தெரு, புதுவண்ணாரபேட்டை சென்னை 81 |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 13th day of August 2025.

எதிரி ஆஜாில் உள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பூமணி என்பவரை 30 வருடமாக தெரியும் என்று சொல்லியுள்ளேன் எப்படி தெரியும் என்றால் நான் மீன் வியாபாரம் செய்யும் வகையில் தெரியும் அவர் விருப்பு ஓய்வு பெற்ற ஒரு காவல் அதிகாரி என்று தெரியும். நான் இருக்கக்கூடிய வண்ணாரபேட்டைக்கும் அவர் வசித்து வரும் பாடி என்ற இடத்திற்கும் வாகனத்தில் சென்றால் 40 நிமிடத்தில் சென்று விடலாம். பூமணி அவரது வீட்டின் மொட்டைமாடியில் நிச்சயதார்த்த விழா அவரது மகளுக்கு பெஞ்சமின் என்பவருக்கும் நடத்தினார். அந்த நிச்சயதார்த்ததில் கலந்துக்கொண்டேன். அந்த நிச்சயதார்த்ததில் வீடியோ புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை, நான் அந்த விழாவிற்கு கலந்த கொண்டதற்கு வீடியோ புகைப்படம் ஏதாவது உண்டா என்றால் இல்லை. அந்த நிச்சயதார்த்தில் ரூ.6 லட்சம் யார் யாரிடம் கொடுத்தார்கள் யார் முன்னிலையில் கொடுத்தார்கள் அதற்கு ஆதாரம் உண்டா என்றால் பூமணியின் வீட்டில் 2 வது மாடியில் உள்ள ஹாலில் வைத்து பூமணி மாப்பிளையின் அம்மாவிடம் கொடுத்தார். அந்த நிச்சயதார்த்ததில் பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் மட்டும் கலந்து கொண்டார்கள், பூமணி அவரது வீட்டு விஷேசத்திற்கு எல்லாவற்றிற்கும் அழைப்பார். மெர்லின் என்பவருக்கு ஏற்கனவே நிச்சயம் முடிந்து இந்த நிச்சயம் இரண்டாவது நிச்சயம் என்பது எனக்கு தெரியும். பூச்சு வேலைக்கு நிச்சயதார்த்திற்கு முன்பு பூமணி மாப்பிளையின் அம்மாவிடம் ரூ.2 லட்சம் கொடுத்ததாக என்று சொன்னார் ஆனால் நான் பார்க்கவில்லை. மெர்லின்க்கு குழந்தை பிறந்த உடன் பார்த்ததாக சொல்லியுள்ளேன் எப்போது பார்த்தேன் என்றால் 6 மாதத்திற்கு பின்பு பார்த்தேன்.

மாப்பிள்ளைக்கு தண்ணி அடிக்கும் பழக்கம் உள்ளது என்றும் மாப்பிளையின் அம்மா டிக்டாக் வீடியோ செய்வது எனக்கு சொல்லி தெரியும் என்றால் சரிதான். மெர்லின் நிச்சயம் முடிந்து அவரது சகோதரருக்கு நிச்சம் நடந்தது அவரது சகோதரர் பெயர் நியாபகமில்லை. அவரது பெயர் எபிசார் என்றும் நான் எபிசார் அப்பாவின் கார் ஓட்டுநர் என்றால் சரியல்ல. எதிரிகள் 4 பேரும் மெர்லினை கொடுமைபடுத்தியதாக சொல்லியுள்ளேன் ஆனால் மெர்லின் மற்றும் அவரது கணவர் மட்டும தனியாக வசித்து வந்ததாக மெர்லின் சாட்சியம் அளித்ததால் மேற்கண்ட சங்கதிகள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருவள்ளூர் சமூக நலத்துறை அலுவலகத்தில் விசாரணைக்கு அழைத்ததன் பேரில் மெர்லின் கணவரும் அவரது கணவரின் தம்பி பிரேம் என்பவரும் அங்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் பணத்தை கொடுத்துவிட்டு சமாதானமாக போங்கள் என்று சொன்னேன் அதற்கு அவர் எனக்கு 100 ரௌடிகளை தெரியும் என்றும் நான் என்ன பன்னனமோ எனக்கு தெரியும் நான் பார்த்துகொள்கிறேன் என்று மிரட்டினார். எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை. நான் பூமணி உடன் துணைக்கு சென்றேன். மேற்கண்ட சம்பவம் தொடர்பாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. கொடுக்கையூரில் இருந்த மெர்லின் மற்றும் 1வது எதிரி தங்கியி்ருந்த வீடு 2வது எதிரிக்கும் மட்டும் சொந்தமான வீடு என்றால் அது பற்றி தெரியவில்லை. 2021 பின்பு ஏற்பட்ட கடன் மற்றும் பிரச்சனை காரணமாக 2வது எதிரி அவரது சொந்த மேற்கண்ட வீட்டை விற்றுவிட்டார் என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்கண்ட வீட்டை விற்ற பணத்தை வைத்து 1வது எதிரியின் கடன் பிரச்சனையை தீர்ந்து வைத்தார் என்று சொன்னால் அது பற்றி தெரியவில்லை. கொடுக்கையயூர் வீட்டை காட்டிதான் பூமணியின் மகளை திருமணம் செய்த விவரம் எனக்கு அவர் சொல்லி தான் தெரியும். அடித்து துன்புறுத்தியதாக விவரம் பூமணி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . 1வது எதிரியை தவிர மற்ற 3 எதிரிகளும் விருக்கம்பாக்கத்தில் திருமணத்திற்கு முன்பு இருந்தே வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்கண்டவாறு துன்புறுத்தல்கள் இருந்திருந்தார் மெர்லின் தந்தை ஓய்வு பெற்ற காவல் அதிகாரி புகார் அளித்திருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நிச்சயதார்தத்திற்கு இரு குடும்பங்களும் இருந்த நிலையி்ல் மீன் வியாபாரி என்னை அழைத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. பூமணிக்கு தெரிந்த நபர் என்ற ஒரே காணரத்தி்ன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல எதிரிகள் எந்த குற்றமும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை / இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur